Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | பங்குனி 01 | [14 - 3 - 1993] | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 24

## உதவிக் கொடுப்பனவிற்கு குறைந்த தொகை ஒதுக்கீடு

யாழ். மாவட்டத்திற்கு பொதுசன மாதாந்த உதவிப்பணக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளவென சமூகசேவைகள் பகுதியினால் வழமையாக ஒதுக்கப்படும் தொகையைவிட இம்முறை 20 வீதம் குறைவான தொகையே ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. இதனைத் தொடர்ந்து மேற்படி கொடுப்பனவுகளை மேற்கொள்ள பிரதேச செயலகங்கள் ஓர் இசகட்டான நிலையில் உள்ளதாக தெரியவருகின்றது. இம்முறை இதற்கென எண்பது வீதமான தொகையே ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், மிகுதி இருபதுவீதமான தொகை பற்றாக் குறையாக இருப்பதனால் மேற்படி கொடுப்பனவுகளில்பல சிக்கல்கள் தோன்றுவதாக தெரியவருகின்றது.

# பம்பாய் குண்டு வெடிப்புக்கள்; காஷ்மீர் தீவிரவாதி நேற்று கைது

## ஈரானுடன் தொடர்புடைய இந்தியர் தேடப்படுகின்றார்

[டில்லி]

பம்பாயில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புகள் தொடர்பாக காஷ்மீர் தீவிரவாத முஸ்லிம் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக யு. என். ஐ. செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

இவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் ஈரானுடன் தொடர்புடைய இந்தியர் ஒருவரும் மற்றும் ஐந்து காஷ்மீர் முஸ்லிம் தீவிரவாதிகளும் தேடப்படுவதாக மேலும்அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பம்பாய் குண்டு வெடிப்புடன் தொடர்புடையவர் என சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட காஷ்மீர் முஸ்லிம் தீவிரவாதி பம்பாய் உல்லாசப் பயணிகள் ஹோட்டல் ஒன்றில் சந்தேகத்திற்குரிய விதத்தில் நடமாடும் போது அவரை அக் ஹோட்டல் காவலாளி மடக்கி பிடித்ததாகவும் பின்னர் இவர் பொலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் இந்திய செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

கைது செய்யப்பட்டவர் தந்த தகவலை தொடர்ந்து 5 காஷ்மீர் முஸ்லீம்களும் ஒரு ஈரானுடன் தொடர்புடைய இந்தியரையும் இந்திய பொலீசார் தேடி வருவதாக அச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

மேலும் சீக்கிய தீவிரவாதிகள் மற்றும் காஷ்மீர் தீவிரவாதிகள் தங்கியிருக்கக் கூடிய இடங்கள் என்று சந்தேகிக்கப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அவகாசம் நீடிப்பு

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ள 26 பேரைக் காவலில் வைத்திருப்பதற்கான கால அவகாசம் இம்மாதம் 17 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக வழக்கை விசாரித்த நீதிபதி திரு எஸ். எம் சித்திக் சென்னைக்கு அருகே உள்ள பூந்தமல்லியில் பலத்த பாதுகாப்புக்கள் கொண்ட சிறப்பு சப்ஸ்ரேசன் ஒன்றில் அவர்களைக் காவலில் வைப்பதற்கு அனுமதி அளித்துள்ளார்.

## பத்துலட்சம் சன்மானம்

[டில்லி]

பம்பாய் குண்டு வெடிப்பு பற்றிய உண்மையான தகவல்களை அளிக்கக் கூடியவர்களுக்கு பத்து லட்சம் ரூபா சன்மானம் அளிக்கப்படும் என்று மகாராஷ்டிரா முதல்வர் சரத்பாவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை இக்குண்டு வெடிப்பு பற்றிய புலனாய்வு பணியில், ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு பிரிவான றோ, தேசிய பந்தோபஸ்து காவல் படை, தேசிய குற்ற தடய

(4-ம் பக்கம் பார்க்க)

## மீட்புநிதி சேகரிப்பு

இன்று காலை 9.00 மணி முதல்10.00 மணிவரை நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை மீட்பு நிதி செலுத்தத் தவறியோர் தமது மீட்பு நிதிக்கடனை இக் குறித்த நேரத்தில் செலுத்த முடியும் என தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் சொ. வெற்றியரசன் அறிவித்துள்ளார்.

# தெரிவுக்குழுவின் திட்டம் யுத்தம் தீவிரப்படவே உதவும்

## பி.பி.சி கருத்து

(லண்டன்)

பாராளுமன்றத்தெரிவுக்குழு முன்வைத்த தீர்வுத்திட்டம் யுத்தத்தைத் தீவிரப்படுத்தவே உதவும் எனவும் சமாதானத்திற்கான சூழல் இப்போது இல்லை என்பதை இது காட்டுகிறது எனவும் பி.பி.ஸி தெரிவித்தது.

இவ்வாறு யுத்தம் ஒன்று ஏற்படுமாயின் பாரிய உயிர், பொருள்சேதம் ஏற்படுமெனவும் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாச வடக்கு கிழக்கு இணைந்த தீர்வு குறித்துப் பரிசீலிக்க வேண்டும் எனவும் பி. பி.ஸி தெரிவித்தது.

எனினும் வடக்கு கிழக்கு இணைந்த தீர்வொன்றை முன்வைப்பது சிங்களவர்களின் கடும் எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொடுக்கும் என்பதால் பிரேமதாச அவ்வாறான தீர்வொன்றைப் பரிசீலிப்பார் என்பது சந்தேகமே என்றும்,

வடக்கில் யுத்தத்தை நடாத்தினால் இராணுவம் தான் வெற்றிபெறலாம் எனக் கருதுகிறது. அதனால் ஏற்படும் உயிர், பொருள் சேதங்களை நாடு தாங்காது எனவும்,

1994 இறுதியில் அல்லது 1995 ஆரம்பத்தில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் தெளிவற்றபோக்கையே கடைப்பிடிக்கும் என்றும் பி. பி. சி. மேலும் தெரிவித்தது.

யாழ். வைத்தியசாலையில்

## நோயாளரை பார்வையிடும் நேரத்தில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் மாலையில் நோயாளரைப் பார்வையிடும் நேரத்தில் மாற்றம்செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

இவ்வறிவித்தலின்படி மாலை 5.00 மணிதொடக்கம் 6.00 மணி வரை நோயாளரைப் பார்வையிடமுடியும்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பம்பாயில் இல. தமிழர் கைது புலிகளுக்கு தொடர்பா?

## ஆராய்வதாக பொலீசார் தெரிவிப்பு

(டில்லி)

பம்பாய் குண்டு வெடிப்பு தொடர்பாக நால்வர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர்களில் ஒருவர் இலங்கைத் தமிழர் என்றும், இவருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே

பாக திறந்த மனதுடன் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கிடைக்கக் கூடிய எந்தத் தகவலையும் எந்தவொரு சாத்தியப்பாட்டையும் நிராகரிக்க முடியாது எனவும் குறிப்பிட்டார். எனவே இந்த குண்டு வெடிப்பு சம்பவங்க

கூறியிருப்பது பற்றி கருத்துத் தெரிவித்த பம்பாயில் இருக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டுவெடிப்பு தொடர்பாக சவான்-சரத்பாவர் பேச்சு

(டில்லி)

நேற்றுமுன்தினம் பம்பாயில்

கும் மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் மற்றும்

# பண்டத்தரிப்பில் மோதல்; [illegible] முயற்சி முறியடிப்பு

(டில்லி)

பம்பாய் குண்டு வெடிப்பு தொடர்பாக நால்வர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர்களில் ஒருவர் இலங்கைத் தமிழர் என்றும், இவருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே தொடர்புகள் ஏதும் இருக்கிறதா என்பது பற்றி விசாரிக்கப்பட்டு வருவதாகவும் பம்பாய் நகர பொலீஸ் கமிஷனர் பி. பி ஸியிடம் தெரிவித்தார்.

பம்பாய் பொலீஸ் கமிஷனர் எம் என். சிங் மேலும் கூறுகையில் இச் சம்பவம் தொடர்பாக திறந்த மனதுடன் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கிடைக்கக் கூடிய எந்தத் தகவலையும் எந்தவொரு சாத்தியப்பாட்டையும் நிராகரிக்க முடியாது எனவும் குறிப்பிட்டார். எனவே இந்த குண்டு வெடிப்பு சம்பவங்களோடு விடுதலைப் புலிகளுக்கு தொடர்பு இருக்கலாம் என்பதை ஒரேயடியாக மறுக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலீசார் கூறியிருப்பது பற்றி கருத்துத் தெரிவித்த பம்பாயில் இருக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

வாதிகள் தங்கியிருக்கக் கூடிய இடங்கள் என்று சந்தேகிக்கப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## குண்டுவெடிப்பு தொடர்பாக சவான்-சரத்பாவர் பேச்சு

(டில்லி)

நேற்றுமுன்தினம் பம்பாயில் பல்வேறு இடங்களில் குண்டுகள் வெடித்து பெருமளவில் உயிர்ச்சேதமும், பொருள் சேதமும் ஏற்பட்டதைத் தொடர்ந்து நிலைமையை நேரில் ஆராய்வதற்கும் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கும் மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் மற்றும் சில அமைச்சர்களும் பம்பாயில் குண்டுகள் வெடித்த கேந்திர நிலையங்களை பார்வையிட சென்றுள்ளனர்.

இதேவேளை குண்டுவெடித்த பகுதிகளில் இராணுவத்தினர் உசார்நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் சவான் குண்டுவெடிப்பு நடைபெற்ற இடங்களை பார்வையிட்டு மகாராஷ்ரா முதலமைச்சர் சரத்பாவருடன் ஆலோசனை நடாத்தினார். இக் குண்டுவெடிப்பில் இறந்த ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் இரண்டுலட்சம்ரூபாய் இழப்பீட்டுத் தொகையாகவும் மேலும் காயமடைந்தவர்களுக்கும் இழப்பீட்டுத் தொகையும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இக் குண்டுவெடிப்புத் தொடர்பாக குடியரசுத்தலைவர் சங்கர் தயாள் சர்மா பிரதமர் பி.வி.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# 'இன்டர்போல்' உதவி பெறுவதற்கு முயற்சி

(டில்லி)

பம்பாய் குண்டுவெடிப்பு சம்பவத்தின் சூத்திரதாரிகளான குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் தேவைப்பட்டால் 'இன்டர்போல்' எனப்படும் சர்வதேச பொலீஸின் உதவி பெறப்படும் என்றும் உள்துறை இணை அமைச்சர் எஸ். பி. சவான் தெரிவித்தார்.

பம்பாயில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க மாநில அரசுக்கு தேவையான அனைத்து உதவிகளும் மத்திய அரசினால் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

இதனிடையே மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் குண்டுவெடிப்பு நேரிட்ட பகுதிகளைப் பார்வையிட நேற்று முன்தினமிரவு விஜயம் மேற்கொண்டிருந்ததுடன் மத்திய றிசர்வ் பொலிஸ்படையை சேர்ந்த பதினொரு கம்பனிகளும், விசேட அதிரடிப்படையின் ஒரு கம்பனியும் மகாராஷ்டிராவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் மத்திய அரசின் புலனாய்வுப் பிரிவு மற்றும் றோ போன்ற புலனாய்வு நிறுவனங்களைச் சேர்ந்த உயர் அதிகாரிகளைக் கொண்ட அணியொன்றும் மாநில அரசுக்கு உதவும் நோக்கில் பம்பாய்க்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது.

# பம்பாய் குண்டு வெடிப்பு இறந்தோர் 300 ஆக உயர்வு

(டில்லி)

பம்பாயில் இடம் பெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்களால் உயிரிழந்தோர் எண்ணிக்கை முந்நூறாக உயர்ந்து உள்ளது. மேலும் எண்ணூற்று ஐம்பத்தி ஐந்துபேர் குண்டு வெடிப்பு சம்பவங்களால் காயமடைந்துமருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டிருப்பதாக ஏஜென்சி செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை காயப்பட்டவர்களில் அனேகர் நிலை மோசமாக இருப்பதாகவும் இதனால் இறந்தோர் தொகை மேலும அதிகரிக்கலாம் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் குண்டு வெடிப்பால் சேதமடைந்த இடிபாடுகளில் இருந்து சடலங்கள் தேடப்பட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் நேற்று முன்தினம் நடந்த குண்டு வெடிப்பு சம்பவத்தின் பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பிக்கொண்டிருப்பதாகவும், நிலைமை கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாகவும் பொலீசார் கூறியுள்ளனர்.

## பம்பாய் குண்டுவெடிப்பு; தமிழகத்தில் உசார் நிலை

(சென்னை)

பம்பாய் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தையடுத்து தமிழகத்திலும் பொலீசார் பொது உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். பஸ் நிலையங்கள், மற்றும் ரயில் நிலையங்கள், விமான நிலையங்கள் உட்பட பல இடங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருப்பதோடு கண்காணிப்பைத் தீவிரப்படுத்துமாறும், வாகனப் போக்குவரத்தை கண்காணிக்குமாறும் காவல்துறையினர் பணிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் வெடிப்பொருள் சேமிக்கப்பட்டிருக்கும் அனைத்து இடங்களிலும் சோதனை நடத்துமாறும் காவல்துறையினர் கேட்கப்பட்டுள்ளனர்.

## போபாலில் குண்டுவெடிப்பு எட்டுப்பேர் காயம்

(டில்லி)

மத்திய பிரதேச மாநிலத்திலுள்ள போபால் நகரின் கடைத் தொகுதி ஒன்றில் நேற்று இடம் பெற்ற குண்டு வெடிப்பினால் எட்டுப்பேர் காயமடைந்தனர். இவர்களில் 6 பேர் ரோந்து சென்றுகொண்டிருந்த பொலீசார் என தெரிவிக்கப்படுகிறது.

# பண்டத்தரிப்பில் மோதல்; படை முயற்சி முறியடிப்பு

[யாழ்ப்பாணம்]

மாதகல் பகுதியில் இருந்து கடற்கரையோரமாக பண்டத்தரிப்பு நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேற்றிரவு கடும் மோதல் நடைபெற்றுள்ளதாக தெரியவருகிறது.

இரவு சுமார் 8.30 மணியளவில் நடைபெற்ற இந்த தாக்குதல் சுமார் 30 நிமிடம் நடைபெற்றதாகவும், இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதுடன் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து ஏற்பட்ட கடும் மோதலை அடுத்து இராணுவத்தினர் தமது முயற்சியைக் கைவிட்டு திரும்பிச் சென்றதாகவும் தெரியவருகின்றது. எறிகணைகள் மக்கள் குடியிருப்புகள் மீது விழுந்து வெடித்ததாகவும் எனினும் உயிரிழப்புகள் எதுவும் ஏற்பட்டதாக தெரியவரவில்லை. [நி]

### நடவடிக்கை பூர்த்தி

[கொழும்பு]

கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட பாரிய இராணுவ நடவடிக்கை பூர்த்தியடைந்து விட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

## யுத்தம் நடைபெறும்வரை மனித உரிமைமீறல் இருக்கும்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் யுத்தம் தொடர்ந்து நடைபெறும் வரை மனித உரிமை மீறல்களை நிறுத்துவது மிக கடினமான காரியமாக இருக்கும் என அரசாங்கசெய்தியொன்று தெரிவித்துள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு - கிழக்கில் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு ஒன்றுக்காக அரசாங்கம் செயல்படும் முறையை ஐ. நா. சபை அவதானித்து வருவதாகவும் அச்செய்தியில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளே எம்மை காக்கின்றனர்

### தமிழர்கள் தெரிவித்ததாக பி. பி. ஸி

[லண்டன்]

''எம்மை இயன்ற அளவில் விடுதலைப்புலிகள் பாதுகாக்கின்றார்கள். கொழும்பு அரசாங்கம் எம்மீது கட்டவிழ்த்து விட்டுள்ள இராணுவநடவடிக்கையை இவர்களே தடுத்து நிறுத்துகின்றார்கள்'' என யாழ் விஜயம் மேற்கொண்டு திரும்பிய பி. பி. ஸி. தமிழ் சேவை ஆனந்திக்கு பெரும்பாலான தமிழ் மக்கள் தெரிவித்ததாக பி. பி. ஸி. சிங்கள

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சமஷ்டி அடிப்படையில் தீர்வு காணவேண்டும்

## சிங்கள புத்திஜீவிகள் வற்புறுத்து

சமஷ்டி அரசியல் அமைப்பின் அடிப்படையில் தற்போது கிடைக்கக்கூடிய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி, பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வு ஒன்று காணப்படவேண்டும் என்று சிங்களப் புத்திஜீவிகள் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர். இதை தற்போது செய்யாது விட்டால் இலங்கை பிளவுபடுத்தப்படுவதை தவிர்க்க முடியாது என்றும் அவர்கள் மேலும் கூறியுள்ளனர்.

இனவாத அணுகுமுறை மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்பதை இன்றைய நிலைமைகள் தெளிவாக்கி இருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இனவாத அணுகுமுறை பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பதிலாக மோசம் அடையவே செய்யும் என்றும், இனவாத அடிப்படையை வாக்கு வேட்டைக்காகப் பயன்படுத்திய கட்சிகள் இப்பொறியை விட்டு வெளியே வரமுடியாது உள்ளன இப்பொறியை விட்டு அவர்கள் வெளியேறாதவரை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கண்டுவிட முடியாது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### மீண்டும் இயங்குகிறது

6-2-93 முதல்மீண்டும்இயங்குகின்றது சோதிட விலாச புத்தகசாலை 46, பெரிய கடை யாழ்ப்பாணம். எம்மிடம், சமய நூல்கள், விஞ்ஞான புத்தகங்கள் சோதிட, வைத்திய நூல்கள், பாடசாலைப் புத்தகங்கள் உபகரணங்கள், ஸ்ரீமுக வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் விற்பனையாகின்றன. சோதிடப்பிரகாசயந்திரசாலை கொக்குவில். (4463)

### விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் றோட் மூத்தவிநாயகர் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. வாங்குவோர் வசதிக்காக தொடர்புமுகவரி: ஷண் வர்த்தக விளம்பர ஒலிபரப்பு சேவை, பஸ் நிலையம், யாழ்நகர். (4072)

### குடும்பநல சேவையாளர் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

குடும்பநல சேவையாளர்களுக்கான இறுதிப்பரீட்சை இம் மாதம் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை இணுவிலில் இயங்கும் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் 21 - 03 - 93 அன்று நடைபெறுமென சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். [சி] [நி]

### கிராம அலுவலர் பயிற்சிநெறி

கிராம அலுவலர்களுக்கான பயிற்சிநெறி ஒன்று கடந்த வாரம் முதல் சனி, ஞாயிறு கிழமைகளில் காலையில் யாழ். பல்கலைக்கழகத்தில் இடம் பெற்று வருகின்றது. முதற் தொகுதி பயிற்சிநெறியில் 100 கிராம அலுவலர்கள் பங்கு பற்றுகின்றனர்.

### பொதுஅறிவுப் போட்டி

பேராசிரியர் லூதர் ஜெயசிங்கம் ஞாபகார்த்த கிண்ணத்திற்கான பொது அறிவுப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த புதன்கிழமை பரியோவான் கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டியின் இறுதிச்சுற்றில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியும், ஹாட்லிக் கல்லூரியும் கலந்து கொண்டன. இப்போட்டியில் ஹாட்லிக் கல்லூரி வெற்றி பெற்று 2ம் முறையாக தொடர்ந்து கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது. (11),(9)

### தீவுப் பகுதி அரசாங்க ஊழியரின்

# இரு மாத சம்பள காசோலை தீவகத்திற்கு சென்றது

(யாழ்ப்பாணம்)

தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்து யாழ். செயலகத்தில் இயங்கிவரும் ஊர்காவற்றுறை, வேலணை மாகாண சபை ஊழியர்களுக்கான இம் மாதக் கொடுப்பனவுகளுக்கான காசோலைகள் நேரடியாகத் தீவகத்திற்கே வடக்கு கிழக்கு மாகாண சபையால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது; தீவக மாகாண சபை ஊழியர்களுக்கான இவ்வாண்டின் இரு மாதங்களுக்கான கொடுப்பனவை யாழ். செயலகம் மத்திய அரசாங்கத்தின் நிதியில் இருந்து கடனாக அவர்களுக்கு வழங்கியுள்ளதாகவும் அந்நிதியை அறவிடும் ஒழுங்குகளை தாம் மேற்கொண்டுள்ளதாகவும் செயலக கணக்காளர் தெரிவித்தார்.

இதேவேளை யாழ். செயலகம் வந்திருந்த வடக்கு-கிழக்கு மாகாண சபை உள்துறை அமைச்சின் பிரதான கணக்காளர் திரு. நடராசாவிடமும் தீவகப் பகுதி மேலதிக அரசாங்க அதிபர் திரு. சண்முகநாதனிடமும் இவ்விடயம் தொடர்பாகத் தாம் உரையாடியதாகவும், தீவகப் பகுதி மாகாண சபை ஊழியர்களுக்கான கொடுப்பனவை இடம் பெயர்ந்து இயங்கி வரும் இடத்திற்கே அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கும்படி தாம் கேட்டுக் கொண்டதாகவும் யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைப் பிரதேச செயலகமாக மாற்றும் அரசாங்கத்தின் திட்டத்தினாலேயே இவ்வாறான சிக்கல்கள் எழுந்துள்ளதெனத் தெரிய வருகின்றது. வடமாகாணத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இப் பிரதேச சபைகள் இயங்கத் தொடங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

### பொன்னாடை போர்த்தி கௌரவம்

தொல்புரம் வழக்கம்பரை மகாமாரி அம்பாள் தேவஸ்தான குரு சிவஸ்ரீ சுந்தரராஜக் குருக்களின் மகன் ஸ்ரீரங்கநாதனுக்கு அண்மையில் வழக்கம்பரை அம்பாள் தேவஸ்தானத்தில் சிவஸ்ரீ கதிர் செல்லப்பாக் குருக்களால் பூணூல் தரித்து பஞ்சாட்சர உபதேசமும் நடைபெற்றதையிட்டு தொல்புரம் மத்தி ஆதிமுத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலன சபையார் ஸ்ரீரங்கநாதனுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்கள் இவ் வைபவத்தில் சிவஸ்ரீ கதிர் செல்லப்பாக் குருக்களும் பண்டிதர் நமசிவாய தேசிகரும் சு. வைத்தீஸ்வரக் குருக்களும் கலந்து சிறப்புரையாற்றி கௌரவித்தார்கள்.

## கப்பம் செலுத்திய பின்பே வர்த்தகர்களுக்கு அனுமதி

[யாழ்ப்பாணம்]

சிறிலங்காப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள தீவகப் பகுதிகளில் இருந்து வர்த்தகர்கள் பொருள்கள் கொள்வனவு செய்வதற்காக படையினரின் உதவியுடன் கொழும்பு, திருக்கோணமலை போன்ற இடங்களுக்குச் செல்லும் போது அவ் வர்த்தகர்களிடமிருந்து கணிசமான தொகையினை படையினரும் ஈ.பி.டி.பி.போன்ற தமிழ்க்குழுவினரும் கப்பமாக அறவிட்டு வருகின்றனர் என தெரிய வருகின்றது.

மேற்படி கொள்வனவிற்காக செல்ல விரும்பும் வர்த்தகர்ஒருவர் அதற்கான அனுமதியைப் பெறப்போகும் போதே படையினருக்கு உரிய 'பங்கை' செலுத்திவிட வேண்டுமாம். பயண ஆயத்தங்கள் முடிந்ததும் தமிழ்க்குழுவினரின் 'கையை' கவனிக்க வேண்டுமாம்.

இதேவேளை சில மாதங்களுக்கு முன் வர்த்தகர் ஒருவரிடம் இருந்து சுமார் எட்டு லட்சம் ரூபாய் கொள்ளையிடப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேற்படி இருசாராருக்கும் 'கப்பம்' செலுத்த மறுத்ததனால் இப்பழிவாங்கல் நிகழ்ந்ததாம்.

## இலங்கைநிர்வாகசேவையில் மேலும் சிலர் இணைவு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி நிர்வாக சேவையை இலங்கை நிர்வாக சேவையுடன் இணைப்பதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. 1992 -ம் ஆண்டு அமைச்சரவைத் தீர்மானத்திற்கேற்பவே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு -1 இற்கு கீழ் சேவையாற்றுவார். இதேவேளை சாவகச்சேரி நகர சபைச் செயலர் திரு. த. நவரட்ணராஜா இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு - 11 தரம் - 1 இன் கீழும், பருத்தித்துறை நகரசபைச் செயலர் திரு. க. சண்முகநாதன், கரவெட்டி பிரதேசசபைச் செயலர் திரு. இ. இராமலிங்கம் ஆகிய இருவரும் இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு- 11, தரம் -11 இன் கீழும் சேவையாற்றுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)


## போராளிகள் நினைவுமலர்

- போராளிகள் நினைவு மலர்கள்,
- துண்டுப் பிரசுரங்கள்,
- சுவரொட்டிகள்,

வெளியிட்டோர், வைத்திருப்போர்

எமக்கு ஆவணத்திற்கு இரு பிரதிகள் அனுப்பி உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

மாவீரர் படிப்பகம்
பலாலி வீதி,
கோண்டாவில்.

(4469)



வாருங்கள்! வந்து பாருங்கள்!

கைதடி மத்தி

**வளர்மதி கல்வி நிறுவன**

அபிவிருத்தி நிதிக்காக

**மாபெரும்**

## நாடகக் கலைவிழா

காலம்:- 14-03-93 ஞாயிற்றுக்கிழமை (இன்று) இரவு 7-30 மணி

இடம்.- கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய மைதானம்

தென்மராட்சி கலை பண்பாட்டுக்கழகம் வழங்கும்

**போராடும் பூமி** (புரட்சி நாடகம்)

இந்தமண் எங்களின் சொந்த மண் புகழ்

*S. G.* சாந்தன் அரிச்சந்திரனாகவும்

அரியாலையூர் நடிக கலாமணி

*V.* செல்வம் சந்திரமதியாகவும்

இணைந்து வழங்கும்

அரியாலை "கலைமகள் கலை ஒளி" நாடகமன்றம்

வழங்கும்

## அரிச்சந்திரா


## நினைவு கூருகின்றோம்...

### 1993-03-14

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை-கந்தளாய்ப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினராற் கைது செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்ட

★ **கிட்ணன்** (சின்னத்தம்பி கிருஸ்ணபிள்ளை - கதிரொளி, வாகரை-மட்டு)

மன்னார்-முருங்கன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய

★ **பாண்டியன்** (செபமாலை நிக்கலஸ்-வட்டக்கண்டல்-மன்னார்)

1986 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய

★ **பரமேஸ்** (-பரமேஸ்வரன்-கள்ளிச்சை வடமுனை-மட்டு)

கிளிநொச்சி-பரந்தன் - முல்லைத்தீவு வீதியிற் சிறிலங்கா இராணுவத்தினராற் சுட்டுக் கொல்லப்பட்ட பரந்தன், 3-ம் வாய்க்காலைச் சேர்ந்த தமிழிளைஞன்

1988 ஆம் ஆண்டு முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு களிக்காட்டுப் பகுதியில், எமது முகாமொன்றின் மீது இந்தியப்படையினரீன் சுற்றிவளைப்பின் போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**கப்டன் வாதவூரன்** (தம்பையா யோகேஸ்வரன்-அம்பாள்குளம்-கிளிநொச்சி)

யாழ்-சுழிபுரம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது தன்னைத்தானே சுட்டு வீரச்சாவெய்திய

**லெப்.குலம்-முரளி** (மயில்வாகனம் முரளிகிருஷ்ணன் - ''தணிகை'' நெல்லியான் வீதி, சுழிபுரம் மேற்கு, யாழ்)

இதே சுற்றிவளைப்பின் போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**அம்மான்-நேசன்** (வினாசித்தம்பி சிவகுமார்-சுழிபுரம்-யாழ்)

1989 ஆம் ஆண்டு கோண்டாவில் குமரக்கோட்டம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

கோண்டாவில் பிரதேசப் பொறுப்பாளர்

**2-ம் லெப்.மோகன்** (தர்மலிங்கம் சாந்தன்-கோண்டாவில் மேற்கு-யாழ்)

**லெப்.சாள்ஸ்** (ஞானசேகரம் ஞானசொரூபன்-சாள்ஸ் வீதி, நெட்டிலிப்பாய், கோண்டாவில்-யாழ்)

**பிரதாப்-குட்டி-பிறேம்** (தங்கராசா பிறேமானாந்தன்-கோண்டாவில் வடக்கு-யாழ்)

யாழ்-புங்கங்குளம் சந்தியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பில் வீரச்சாவெய்திய

**நவநீதன்** (நவரத்தினம் நவநீதன்-77/4 புங்கங்குளம் வீதி அரியாலை-யாழ்)

காரைநகரில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய

**முஸ்தபா** (செபமாலை செபஸ்தியாம்பிள்ளை-நெடுந்தீவு-யாழ்)

இதே பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**பரமேஸ்** (கந்தசாமி பரமேஸ்வரன்-நெடுந்தீவு-யாழ்)

பளைச்சந்தியில் பேருந்தில் வைத்து இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்

1991ஆம் ஆண்டு மட்டு- புலிபாய்ந்த கல்லில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**விமல்** (த. பிரபாகரன் - பொத்துவில்- அம்பாறை)

தொடர்ந்து கிண்ணத்தை சுவீ
கரித்துக்கொண்டது. (11),(9)

(4469)

கோண்டாவில்.

# பதவி வெற்றிடம்

## புங்குடுதீவு — நயினாதீவு
## ப. நோ. கூ. சங்கம் (வ. து)

## பொதுமுகாமையாளர் தரம் III

1. கல்வித் தகைமைகள்:

அ. கூட்டுறவு வேலையாளரின் 8ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமைத்துவ / மேற்பார்வையாளர் பதவியில் 3 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு வேலையாளர் 9 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் 6 வருடத்துக்குக் குறையாத அனுபவம்,

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டதாரி அல்லது சம மதிப்புள்ள தராதரமும், ஒரு அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனத்தில் முகாமைத்துவமட்ட பதவியில் 2 வருடத்துக்குக் குறையாத அனுபவம்,

அல்லது

இ. கூட்டுறவு பணியாளர் பயிற்சி நெறி (உயர்தரம்) தராதரப் பத்திரம் / க பொ. த (உயர்தரம்) தராதரப் பத்திரத்தில் 3 பாடங்களில் சித்தியும், ஒரு அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனத்தில் முகாமைத்துவமட்ட பதவியில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

2. சம்பளத்திட்டம்:- $\frac{1105 — 2170}{60 X 4 — 75 X 11}$ இதர படிகளும்

3. வயதெல்லை:- 23 — 50

4. பிணைரொக்கம்:- 3000/-, ஆதனம் 5000/- ம்

5. விண்ணப்ப முடிவு திகதி:- 31-03-1993

விண்ணப்பங்கள், தலைவர், புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ. சங்கம் இல:- 201/1, 3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம், என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தலைவர்,
புங்குடுதீவு-நயினாதீவு ப. நோ. கூ. சங்கம்
யாழ்ப்பாணம்.

(சி-6188)

---

வழங்கும்

# அரிச்சந்திரா மயானகாண்டம்

(புராண இசை நாடகம்) பிரவேசம்: ரூ. 10-00

S. G. சாந்தன், V. செல்வம் இணைந்து வழங்கும் அரிச்சந்திரா மயான காண்டம், ஸ்ரீவள்ளி, சத்தியவான் சாவித்திரி போன்ற இசை நாடகங்களை மேடையேற்ற விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய

முகவரி:

அரியாலை கலைமகள் கலைஒளி
நாடகமன்றம்,
17 A, இராஜேஸ்வரி வீதி, அரியாலை,
நாயன்மார்கட்டு.

[4471]

---

...க்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்

1991ஆம் ஆண்டு மட்டு- புலிபாய்ந்த கல்லில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**விமல்** (த. பிரபாகரன் - பொத்துவில்- அம்பாறை)

முறக்கொட்டாஞ்சேனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். மணி** (கந்தையா சேனாதிராசா - சந்திவெளி- மட்டு.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ மேற்குறிப்பிட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6192)

---

# நாளை மாபெரும் நாடகக் கலைவிழா



**ஸ்ரீ காளியம்பாள் சனசமூக நிலைய**

வளர்ச்சிக்காக

காலம்:- **15-3-1993**

திங்கட்கிழமை மாலை

**7-30 மணிக்கு**

இடம்:- கோப்பாய்

**கிறீஸ்தவ கல்லூரி**

''இந்தமண் எங்களின் சொந்தமண்'' புகழ்

**S. G. சாந்தன்**

அரிச்சந்திரனாகவும்

அரியாலையூர் நடிக கலாமணி

**V. செல்வம்**

சந்திரமதியாகவும்

இணைந்து வழங்கும்

# அரிச்சந்திரா மயானகாண்டம்

புராண இசை நாடகம்

(4470)

நல்லூர் இளை நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

மனிதப்பிறவிகள் எல்லாம் சீர்குலைவுக்கு ஆளாகும். மன்னர்களும் கீழ்ப்படிய வேண்டும் ஊழ்வினை அழைக்கும் போது.

— ஜான் ட்ரைடன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 14-03-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் 05

# தமிழகத்தில் 'புதிய ஜனநாயகம்'

தமிழகத்தில் இன்று 'புதியவகை ஜனநாயகம்' ஒன்று தீவிரமாக அறிமுகமாகி வருகின்றது. இதற்கு தற்பொழுதுள்ள அ. இ. அ. தி. மு. க. அரசாங்கம் தனது பூரண ஒத்துழைப்பையும், ஊக்கத்தையும் வழங்கி வருகின்றபோதும் இதன் முன்னோடிகள் தனியாக அவர்கள் மட்டுமல்ல, இதற்குமுன் ஆட்சியில் இருந்த தி. மு. கவினரும், தற்பொழுது ஆட்சியில் இருக்கும் அ. தி. மு. கவுடன் அரசியல் கூட்டுவைத்திருந்த இந்திரா காங்கிரஸ்காரர்களுமே ஆவர்.

கடந்த கால அரசியல் வரலாற்றில் தமிழக சட்டப் பேரவை கூச்சலுக்கும், குழப்பத்திற்கும், அடிதடிகளுக்கும் பெயர்பெற்றது. பேசுபவரின் மைக்கைப் பிடுங்குதல், கூக்குரல் இடல், சபைக் காவலர்களைக் கொண்டு உறுப்பினர்களை வெளியேற்றுதல், பரஸ்பரம் வசைமாரி பரிமாறிக் கொள்ளுதல் என்பவை கடந்த காலத்தில் சகஜமான தொன்றாகவே இருந்தது. ஆனால் அவை தற்பொழுது உருவாகியுள்ள 'புதிய ஜனநாயக மரபுகளின்' தோற்றுவாயாக இருப்பினும் ஓரளவு பழைய ஜனநாயக மரபுகள் அவற்றை ஓரளவேனும் ஏற்றுக் கொண்டன.

ஆனால் கடந்த முறை ஆட்சியில் இருந்த தி. மு. கவினர், தற்போதைய அ. தி. மு. க. தலைவியும், தமிழக முதலமைச்சருமான ஜெயலலிதாவின் சேலையைப் பிடித்து இழுத்தமை 'புதிய ஜனநாயகத்தின்' பாற்பட்டதே.

ஆனால், அதன் வளர்ச்சி மிக விரைவாக, எதிர்பாராத வேகத்தில் வளர்ந்து வருகின்றது. இன்று தமிழக சட்டசபையில் எதிர்க்கட்சியினர் தாக்கப்படுவது சர்வசாதாரணமானதொரு நிகழ்ச்சியாக மாறி வருகின்றது. அத்தோடு, அரசாங்கக் கட்சியினரைப் பொறுத்து இது உற்சாகம் ஊட்டும் விடயமாகவும், ஊக்குவிக்கப்படும் ஒன்றாகவும் உள்ளது.

அத்தோடு, ஒருவரின் வேட்டியைப் உரிதல் சபையை விட்டு வெளியேற்றுதல் - இதனை துரத்துதல் என்பதே சரியானது - பேச அனுமதி மறுத்தல், பத்திரிகையாளரைக் கைது செய்யவும் சட்டசபையில் ஒரு கூண்டு தயாரித்து அதில் குற்றவாளியான பத்திரிகையாளரை நிறுத்துதல் போன்றவையெல்லாம் சாதாரண நிகழ்வாக மாறியுள்ளன.

## விளையாட்டு

யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு அணிக்கும் யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரிவிளையாட்டு அணிக்கும் இடையிலான வருடாந்த மென்பந்தாட்ட (கிரிக்கெட்) போட்டி இம்மாதம் 19ஆம் 20ஆம் திகதிகளில் யாழ் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். (88)

[தென்மராட்சி]

யா/கைதடி நவீல்ட் பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 18-ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் அதிபர் திரு. கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதற்குப் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி ஜெயகுலராசா அவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். [86]

[தென்மராட்சி]

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் தடகள விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யா/மட்டுவில் மகா வித்தியாலயத்தில் நடைபெறும். [86]

[தொல்புரம்]

சுழிபுரம் கொத்தணிப் பாடசாலைகளுக்கு இடையில் 1993-ம் ஆண்டிற்கான உடற்பயிற்சிப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

இப்போட்டிகளில் பின்வரும் பாடசாலைகள் வெற்றி பெற்றன: 15 வயதின் கீழ் ஆண்கள்: 1 ஆம் இடம் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை, 2 ஆம் இடம் விக்ரோறியாக் கல்லூரி, 3 ஆம் இடம் சுழிபுரம் ஆறுமுக வித்தியாசாலை. 17 வயதின் கீழ் ஆண்கள்: 1 ஆம் இடம் விக்ரோறியாக்கல்லூரி, 2 ஆம் இடம் பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாசாலை, 3 ஆம் இடம் ஆறுமுக வித்தியாசாலை. 19 வயதின் கீழ் ஆண்கள்: 1 ஆம் இடம் விக்ரோறியாக் கல்லூரி, 2ஆம் இடம் மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை.

15 வயதின் கீழ் பெண்கள்: 1 ஆம் இடம் விக்ரோறியாக் கல்லூரி, 2 ஆம் இடம் பண்ணாகம் மெய்கண்டான், 3ஆம் இடம் பொன்னாலை வ.பெ. வித்தியாசாலை. 17 வயதின் கீழ் பெண்கள், 1 ஆம் இடம் விக்ரோறியாக் கல்லூரி, 2 ஆம் இடம் பண்ணாகம் மெய்கண்டான், 3 ஆம் இடம் மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை. 19 வயதின் கீழ்

# ஐ. சி. ஆர். சி. பொறுப்பேற்ற பின்பும் படையினர் துன்புறுத்தினர்

## முல்லைத்தீவு வாசி தகவல்

[சுன்னாகம்]

பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த போது சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் எம்மைப்பொறுப்பேற்ற பின்னரும் இராணுவத்தினரின் துன்புறுத்தல் இருக்கவே செய்தது என அண்மையில் இராணுவத்தினரின் பிடியிலிருந்து விடுதலையான முல்லைத்தீவைச் சேர்ந்த யோகேந்திரராசா (34), அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் (47), ராமன் சடையன் (37) ஆகியோர் தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்; செஞ்சிலுவைப் பிரதிநிதிகளிடம் தங்கள் குறைகளைத் தெரிவிக்கும் போது கூடவே, தமிழும் ஆங்கிலமும் தெரிந்த சிப்பாய்கள் நிற்பார்களென்றும், கவனிப்புகளைப் பற்றி குறை கூறின், செஞ்சிலுவையினர் சென்றதும், தாக்கப்பட்ட சம்பவமும் நடந்துள்ளது என்றும் கூறினர்.

7 மாதங்களுக்கு இரு தடவையே சவர்க்காரங்கள் தரப்பட்டன என்றும், உடல் வலுவுள்ளவர்களைக்கொண்டு தங்கள் காப்பரண்களை சுத்திகரிக்கவும் - பதுங்குகுழிகளை வெட்ட அழைத்தும் செல்வார்கள் என்றும்கூறினர். தங்களை விடுதலை செய்ததன் பின்னரும், இன்னும் தங்களுக்குத் தெரிந்தவரையில் 20 பேர்கள் வரை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனரென்றும், அவர்களை எதிர்வரும் மாதமளவில் விடுதலை செய்யப்போவதாகவும் இராணுவத்தினர் தெரிவித்ததாகவும், அவர்கள் தெரிவித்தனர். (11)(09)

## புனர்வாழ்வுக் கழகம் அகதிகளுக்கு உதவி

(தென்மராட்சி)

முகமாலை சமுத்திரன் குடியிருப்பில் தங்கியிருக்கும் குடும்பங்களுக்கு ஒரு மாதத்திற்கு இருதடவை இலவசமாக உலர் உணவினை பளை புனர்வாழ்வுக்கழகத்தினர் வழங்கி வருகின்றனர். அத்தோடு மக்களின் தண்ணீர்பிரச்சினையைத் தீர்க்க 35,000/- ரூபா செலவில் குழாய்க்கிணறு ஒன்றையும்இக்கழகம்அமைத்துக்கொடுத்துள்ளது. அத்தோடு அங்குள்ளவர்களுக்கு தமது தொழில்களை செய்வதற்கு வட்டி இல்லாக் கடனாக ஒருவருக்குரூபா 3000/- வீதம் இதுவரை 83 பேருக்கு வழங்கி வருகின்றது.

## புலிகளின் பிரதேசத்தில் வாழ தமிழ்க்குடும்பங்கள் விருப்பம்

வவுனியா மாவட்டத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் மீளவும் சென்று குடியேற 22 குடும்பங்களைச் சேர்ந்த 83 பேர் விருப்பம் தெரிவித்துள்ளதாக புனர்வாழ்வு புனர்நிர்மாண, சமூக நலவிருத்தி அமைச்சின் செயலாளர் கிரிஸ்ரி சில்வா நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்திலும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் சென்று குடியேற 36 குடும்பங்கள் விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவிலிருந்து அகதிகள் மீண்டும் விரைவில் தாயகம் திரும்புவர் என்றும் அவர் தெரிவித்தார்.

## களுத்துறைச் சிறையில் உள்ளோரை உறவினர் பார்வையிட சில நிமிடங்களே அனுமதி

களுத்துறை சிறையில் இருக்கும் தமிழ் இளைஞர்களை உறவினர்கள், குடும்பத்தினர் பார்ப்பதற்கு இராணுவத்தினரால் ஐந்து நிமிட நேர அவகாசம் மட்டுமே வழங்கப்படுகிறது.

அங்கு சென்று தனது கணவனைப் பார்த்து விட்டுத் திரும்பி வந்த பெண்மணி, அதிக பணத்தைச் செலவு செய்து எனது கணவனைப் பார்க்க கொழும்புக்குச் சென்றிருந்து 15 தினங்கள் அங்கே நின்றும் ஐந்து நிமிடங்கள் மட்டுமே எனது கணவருடன் கதைக்க அனுமதி கிடைத்தது எனக் குறிப்பிட்டார். [யோ]

## இடமாற்றம்

பருத்தித்துறை மிருக வைத்தியர் அலுவலகத்தில்கால்நடை அபிவிருத்தி போதனாசிரியராக பணியாற்றிய திரு. க. சூரியகுமாரன் இம்மாதம் 15ஆம்திகதி கிளிநொச்சிமிருக வைத்தியர் அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் செல்கிறார். இவரது இடத்திற்கு கிளிநொச்சியிலிருந்து திரு.சி. சித்திரவேல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். [யோ]

## மாகாணசபை தேர்தலுக்கு கிழக்கில் புதிய கட்சி

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதை நோக்கமாகக்கொண்டு கிழக்கு மாகாணத்தில் புதிய அரசியல் கட்சி ஒன்றைத் தோற்றுவிக்கும் முயற்சியில் சிலர் ஈடுபட்டிருப்பதாக நம்பகரமாகத் தெரிய வந்துள்ளது.

கிழக்கு மக்கள் விடுதலை முன்னணி என்ற பெயரில் செயற்படவிருக்கும் இக் கட்சியில் ஈ. பி. ஆர். எல். எவ். எம். பியான பிரின்ஸ் காசிநாதர், ரெலோ எம். பியான கருணாகரன் மற்றும் ஜே. நித்தியானந்தம் போன்றோர் முக்கிய பிரமுகர்களாக இருப்பர் என்றும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசைப் போல ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஆதரவுப் போக்கு ஒன்றை இக் கட்சி கடைப்பிடிக்கும் என்றும் கூறப்படுகிறது.

## பால்மா உணவு முத்திரை

குழந்தைப் பால்மா உணவு முத்திரை வழங்கலுக்காக ஒரு வயதிற்குட்பட்ட பிள்ளைகள் இருப்பவர்கள் தம்மிடம் வந்து பதிவு செய்து கொள்ளு

## பேராதனையில் வெளிவாரி பட்டப்படிப்பு

## கலை முதல் தேர்வு முடிவு தாமதம் குறித்து அதிருப்தி

கலை முதல் தேர்வு (வெளிவாரி) முடிவுகளை ஒரு வரு... பரீட்சைக்குத் தோற்றினார்

## கூட்டம்

யாழ். பாலர் கல்விக் கழகத்தின் 27 வது வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று பி.ப. 3 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கழகத்தலைவர் ஆ. செல்லையா கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார்.

யாழ் மாவட்டத்திலுள்ள சனசமூக நிலையங்களின் கீழ் இயங்கும் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கவும் அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளம்தொடர்பாகவும் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்காக இன்று காலை 10.00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட சனசமூக நிலைய சம்மேளனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக்கூட்டத்தில் மேற்படிபாலர் பாடசாலை ஆசிரியர்களுக்காக சங்கம்ஒன்று உருவாக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது (17)

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் இம்மாதம் 16-ம்திகதி செவ்வாய்க்கிழமை மாலை 2.00 மணிக்குசங்கமண்டபத்தில் திரு. செல்லையா உருத்திரா தலைமையில் நடைபெறும். [88]

யாழ். மத்தியகல்லூரிபழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் அதிபர் அ. சண்முகநாதபிள்ளைதலைமையில் இன்றுகாலை கல்லூரிமண்டபத்தில் நடைபெறும். (88)

(கொழும்புத்துறை)

நல்லூர் அருள்மிகு ஸ்ரீசட்டநாதர் ஆலயபரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை பி.ப. 3.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் சபைத் தலைவர் தலைமையில் நடைபெறும். [24]

## மீனவருக்கு உணவு முத்திரை

(குருநகர்)

மீனவர்கள் குடும்பங்களுக்கு 'இ' உலர் உணவு அட்டையை மீளப்பெற்று உணவு முத்திரை தொகுதி வழங்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவாலும் வழங்கப்படுகின்ற உணவு முத்திரைத் தொகுதியில் 1 முதல் 8 வயது வரை உள்ளவர்களுக்கு 50 ரூபா பெறுமதியான முத்திரைகளும், 8 முதல் 12 வயது வரையானவர்களுக்கு

மறுத்தல், பத்திரிகையாளரைக் கைது செய்யவும் சட்டசபையில் ஒரு கூண்டு தயாரித்து அதில் குற்றவாளியான பத்திரிகையாளரை நிறுத்துதல் போன்றவையெல்லாம் சாதாரண நிகழ்வாக மாறியுள்ளன.

இவற்றிற்கும் மேலாக சட்டசபையில் கௌரவத்திற்கும், மதிப்பிற்கும் உரிய, அதேவேளை ஒரு நீதிபதிக்குரிய ஸ்தானம் போன்றிருந்த சபாநாயகர் பதவி இன்று ஒரு கேலிக்குரியதாக அரசு தரப்பு 'வழக்கறிஞர்' ஒருவரின் ஆசனமாக மாறியுள்ளது.

கடந்த வருடத்தில் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா சபாநாயகரின் ஆசனத்தில் அமர்ந்திருக்க சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா அப்பால் ஒதுங்கி நின்றமை ஜனநாயக மரபில் ஒரு புதிய அம்சமாகும். சபை விவாதங்களின்போது சபாநாயகர் நடுநிலை தவறி அரசிற்கு ஆதரவாகப் பேசுகின்றமையும், தீர்ப்புக்கள் வழங்குவதும் இன்று சாதாரணமானதாகும்.

இறுதியாக இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏ. அல்போன்ஸ், நேற்றுமுன்தினம் அ.தி.மு.க. வைச் சேர்ந்த சிலரால் எம். எல். ஏ.களின் தங்குவிடுதியில் வைத்துத் தாக்கப்பட்டுள்ளார். அண்மையில் அ.தி.மு.க விற்கும் – காங்கிரஸ் கட்சிக்கும் இடையில், உறவு முறிவடைந்த பின்னர் ஏற்பட்ட முதலாவதுசம்பவம் இதுவாகும். ஆனால் இதுபற்றி தமிழகசட்டசபையிலும், மத்தியில் லோக்சபாவிலும், ராஜ்ய சபாவிலும் கூச்சலும், குழப்பங்களும் ஏற்பட்டது. ஆனால், இது புதியதொன்றல்ல. காங்கிரஸ்காரர் வருத்தப்படவேண்டிய விடயமுமல்ல.

ஏனெனில் அ. தி மு. க. தலைவி செல்வி ஜெயலலிதாவின் தலைமையில் 'புதிய ஜனநாயக மரபுகள்' தமிழகத்தில் உருவாக்கப்பட்டபோது அதற்கு ஒத்தாசையும், ஆதரவும் வழங்கியவர்கள் தமிழக காங்கிரஸ்காரர்கள் ஆகும்.

எடுத்துக்காட்டாகப் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் பண்ருட்டி ராமச்சந்திரன் சட்டசபையில் பேசிக் கொண்டிருக்கும்போது அரசாங்க ஆதரவு எம். எல். ஏ. தாமரைக்கனி அவரைத் தாக்கியபோது அதற்காக காங்கிரஸ்காரர் குரல் கொடுக்கவில்லை. அதேபோன்று தி. மு. க. எம். எல். ஏக்கு எதிராக அ. தி. மு. கவினர் மேற்கொண்ட ஜனநாயக விரோத செயல்கள் குறித்தும் காங்கிரஸ்காரர்கள் கண்டுகொள்ளவில்லை.

இந்நிலையில் காங்கிரஸ்காரர் ஒருவர் தாக்கப்பட்டால் துள்ளிக் குதிப்பதேன்? தமிழகத்தின் 'புதிய ஜனநாயக மரபுகளில்' இதுவும் ஒன்றே என ஏற்றுக் கொள்வதே நியாயமானதாகும்.

---

விக்ரோறியாக் கல்லூரி, 2 ஆம் இடம் பண்ணாகம் மெய்கண்டான், 3 ஆம் இடம் மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை. 19 வயதின் கீழ் பெண்கள்: 1 ஆம் இடம் விக்ரோறியாக் கல்லூரி. [41]

## போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

1993 கம்பன் விழாவை முன்னிட்டு அகிலஇலங்கை கம்பன் கழகம் நடாத்திய அமரர் வித்துவான் சி. ஆறுமுகம், அமரர் தேவன் நினைவு கவிதை, பேச்சுப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

கவிதை முதலாமிடம்:– செல்வி அருந்ததி வேலுப்பிள்ளை - பருத்தித்துறை, இரண்டாமிடம்- த. சிவசங்கர் யாழ். பல்கலைக்கழகம், மூன்றாமிடம் செல்வி பிரேமினி சபாரட்ணம் சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

பேச்சு முதலாமிடம் - த. நாகேஸ்வரன் சாவகச்சேரி இரண்டாமிடம் சாந்தினி சந்திரலிங்கம் அச்சுவேலி, மூன்றாமிடம் சி. நந்தகுமார் தேசிய சேமிப்பு வங்கி.

இவர்களுக்குரிய பரிசுகள் ஏப்ரல் முதல் வாரத்தில் நடைபெறும் கம்பன் விழாவில் வழகப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## அதிகரித்த சம்பளம் அனுப்பப்பட்டது

(யாழ்ப்பாணம்)

1. 1. 93இல் இருந்து அதிகரித்த சம்பளம் மாற்றி அமைக்கப்பட்டு வேலணைக் கோட்ட ஆசிரியர்கள் அனைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சம்பள மாற்றுக் கடிதங்கள் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சி பெறும் வேலணைக் கோட்ட ஆசிரியர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இத்தகவலை வேலணைக் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் பொ. சிவகுருநாதன் தெரிவித்தார்.

---

குழந்தைப் பால்மா உணவு முத்திரை வழங்கலுக்காக ஒரு வயதிற்குட்பட்ட பிள்ளைகள் இருப்பவர்கள் தம்மிடம் வந்து பதிவு செய்து கொள்ளுமாறு புங்குடுதீவுப்பகுதி கிராம சேவை அலுவலர்கள் அறிவித்துள்ளார்கள். பதிவு செய்ய வரும்போது பிறப்புச் சான்றிதழ், குடும்ப பதிவு அட்டை, பங்கீட்டுஅட்டை என்பவற்றை கொண்டு வருதல் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. [22]

## கலை முதல் தேர்வு முடிவு தாமதம் குறித்து அதிருப்தி

கலை முதல் தேர்வு (வெளிவாரி) முடிவுகளை ஒரு வருட காலமாகியும் பேராதனைப் பல்கலைக் கழகம் வெளியிடவில்லை என்று வெளிவாரி மாணவர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

15,000க்கும் அதிகமான மாணவர்கள் ஏப்ரல் 1992 இல் பொதுக் கலைத் தேர்வுப் பரீட்சைக்குத் தோற்றினார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

பேராதனைப் பல்கலைக் கழகம் வெளிவாரி மாணவர்களை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் பார்ப்பதால் இந்த நிலை என்று வெளிவாரி மாணவர்கள் தரப்பில் கூறப்படுகிறது.

---

# ஜெயலலிதா இருக்கும்வரை தமிழகத்தில் அமைதியிராது

## - சிதம்பரம் தெரிவிப்பு

(டில்லி)

தமிழகத்தில் ஜெயலலிதாவின் ஆட்சி இருக்கும் வரை அங்கு அமைதி இருக்காது என்பதையே பீட்டர் அல்போன்ஸ் தாக்கப்பட்ட சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது என்று மத்திய அரசின் முன்னாள் அமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்தார். நேற்று முன்தினம் மக்களவையில் பேசிய அவர் மேலும் கூறுகையில்; தாம் அமைச்சராக இருந்த போதே தமக்கு எதிரான தாக்குதல் நடத்தப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அ. இ. அ. தி. மு. க. தனது அரசியல் எதிரிகள் மீது வன்முறையை ஏவி விடுகின்றது என்பதையே இச் சம்பவம் காட்டுவதாக காங்கிரஸ் உறுப்பினர் குப்புசாமி தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் கே. பி. இராமச்சந்திரன் இது ஜனநாயகத்தின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல் என்று வர்ணித்தார்.

பொலீசாரின் கண் முன்னாலேயே சட்டமன்ற உறுப்பினர் தாக்கப்பட்ட இச் சம்பவம் தற்போதைய தமிழகத்தின் நிலையை எடுத்துக் காட்டப் போதுமானதாகும் என்று ஜனதாக் கட்சியின் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி குறிப்பிட்டார்.

---

## மேற்கு வங்கம் பேரணிக்குத் தடை

மேற்கு வங்காளத்தில் அடுத்த மாதம் 11-ம் திகதி பாரதீய ஜனதாக்கட்சி நடாத்தத் திட்டமிருந்த பேரணியை அம்மாநில அரசு தடைசெய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## பங்குச் சந்தை ஊழல்; ராவின் மகனுக்கும் தொடர்பு?

[ஹைதராபாத்]

இந்தியாவில் இடம் பெற்றிருக்கும் மிகவும் மோசமான பங்குச்சந்தை ஊழல் மோசடியில் பிரதமர் பி.வி. நரசிம்மராவின் மகன் பிரபாகர் ராவிற்கு தொடர்பிருப்பதாக கூறப்படுவது குறித்து பிரதமர் விளக்கமளிக்க வேண்டும் என என்.டி ராமராவ் தலைமையிலான தெலுங்குதேசம் கட்சி கோரியிருக்கிறது.

இது தொடர்பாக மேற்படி கட்சியின் நான்கு சட்டசபை உறுப்பினர்கள் ஹைதராபாத்தில் பத்திரிகையாளர் மாநாடொன்றில் உரையாற்றுகையில் ஆங்கில தினசரியொன்றில் வெளியான செய்திகளைக் குறிப்பிட்டு பங்குச்சந்தைஊழலில் பிரதமரின் குடும்பத்தினர் சம்பந்தப்பட்டிருக்கின்றார்கள் என்பது ஊர்ஜிதப்படுத்தப்பட்டுவிட்டதாக குறிப்பிட்டுள்ளனர்.

பங்குச்சந்தை தரகரான ஹைதன் பி. தலாவிடம் இருந்து பிரதமரின் மகன் பிரதம பங்காளராக இருக்கும் கம்பனியொன்று இரண்டு கோடி ரூபாவை பெற்றிருப்பதாக செய்திகள் வெளியானதையடுத்து நாட்டிற்கு விளக்கமளிக்க வேண்டிய கடப்பாடு கொண்டவராக பிரதமர் இருக்கின்றார் என அவர்கள் தெரிவித்தனர்.

---

தொகுதியில் 1 முதல் 8 வயது வரை உள்ளவர்களுக்கு 50 ரூபா பெறுமதியான முத்திரைகளும், 8 முதல் 12 வயது வரையானவர்களுக்கு 40 ரூபா பெறுமதியான முத்திரைகளும், 12 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவருக்கும் 30 ரூபா பெறுமதியான முத்திரைகளும் அடங்கியுள்ளன.

முத்திரைகள் வழங்கப்படுகின்ற அதேநேரம் மேற்படி முத்திரைகளுக்கான உலர் உணவுப் பொருள்களை கட்டுப்பாட்டு விலையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் வழங்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (21)

## மருந்துகள் அன்பளிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறைஅரசினர்வைத்தியசாலைக்கு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினர் 4,000 நெருப்புக்காய்ச்சல் மருந்து வில்லைகளையும், பிரான்ஸ் வைத்திய சேவைக் குழுவினர் 2,000 நெருப்புக் காய்ச்சல் மருந்து வில்லைகளையும் வழங்கியுள்ளனர். இவ்வைத்தியசாலையில் நெருப்புக்காய்ச்சல் மருந்துகளுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டால் நெருப்புக் காய்ச்சல் நோயாளிகள் பலத்த இன்னல்களையும், கஷ்டங்களையும் அனுபவித்து வந்தனர். (25)

## உதிரிப் பாகங்கள் திருட்டு

(குருநகர்)

யாழ். நாச்சிமார் கோவிலடி ச. நந்தகோபால் என்பவரது வீட்டில் இருந்து பல ஆயிரம் ரூபா . பெறுமதிவாய்ந்த மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்கள் கொள்ளையடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி அவர் காவல் துறை பணிமனையில் செய்துள்ள புகாரில் பற்றறிகள், சாவி செற் மற்றும் எக்ஸ்ரா வீல் போன்ற பொருள்கள் திருடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (21)

ஈழநாதம்

# பொருளாதார வளர்ச்சியை சீர்கெடுக்க முயற்சி

## குண்டு வெடிப்பு குறித்து ராவ் கருத்து

(டில்லி)

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை தடைப்படுத்தும் ஒரு முயற்சியாகவே பம்பாயில் குண்டு வெடிப்புக்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன என்று இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கூறியுள்ளார்

பம்பாய் குண்டு வெடிப்பு சம்பவங்கள்இடம்பெற்றஇடங்களை நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தின் பிரதிநிதியாக விளங்கும் பம்பாய் நகரில் நடத்தப்பட்டிருக்கும் இத்தாக்குதல் நடத்தியவர்கள், திட்டம் தீட்டியவர்கள் மற்றும் செயல்படுத்தியவர்கள் உட்பட சகலரையும் புலனாய்வு அமைப்புக்கள் கண்டுபிடிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். குற்றம் இளைத்தவர்களை புலனாய்வு அமைப்புக்கள் விரைவில் கண்டுபிடிக்கும் என்றும் பிரதமர் நம்பிக்கை வெளியிட்டார். இதேவேளை பம்பாய் குண்டுவெடிப்பு சம்பவம் பற்றிய துப்புத்துலக்கல் மற்றும் புலனாய்வுப் பணியில் சி. பி. ஐயும் நேற்று முதல் ஈடுபடுத்தப்படுவதாக உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை பம்பாய் போய் சேர்ந்த பிரதமர் நரசிம்மராவை விமான நிலையத்தில் மகாராஷ்டிர மாநில ஆளுநர் பி. சி. அலெக்சாண்டர் உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் மற்றும் உயரதிகாரிகள் ஆகியோர் வரவேற்றனர்.

குண்டு வெடிப்பினால் காயமுற்று சிகிச்சை பெறுவேரை மருத்துவ மனைக்குச் சென்று பிரதமர் நரசிம்மராவ் பார்வையிட்டு ஆறுதல் கூறினார்.

## மதவாதத்திற்கு எதிராக ஐந்து கோடி கையெழுத்து

(சென்னை)

இடதுசாரிகள் மற்றும் மதசார்பற்றசக்திகள் ஒருங்கிணைந்து குரல் எழுப்பவேண்டிய தருணம் வந்துவிட்டதாக மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் ஹரி கிசோன்சிங் சுர்ஜித் கூறியுள்ளார்.

கோயம்புத்தூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில்;

நாடு தற்போது மதவாத சக்திகளின் அச்சுறுத்தலை எதிர்நோக்கியிருப்பதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் தமது கட்சியும் மற்றும் மதசார்பற்ற கட்சிகளும் இணைந்து மதவாதத்திற்கு எதிராக ஐந்து கோடி கையெழுத்துக்களைத் திரட்டவும் முயல்வதாகவும் தெரிவித்தார்.

அரசியலில் மதத்தைக் கலப்பதைத் தடுக்கச் சட்டம் கொண்டுவரவேண்டும் என்று பிரதமர் நரசிம்மராவ் தெரிவித்துள்ளமை பற்றி கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறுகையில், அரசியலில் மதத்தைக் கலப்பதைத் தடுப்பதற்கு மக்களிடம் அதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியமானதாகும் என்றும் தெரிவித்தார்.

பம்பாய் குண்டுவெடிப்புச் சம்பவம்பற்றிக் குறிப்பிடுகையில், இது நாட்டிற்குப் பெரும்அச்சுறுத்தலாக அமைந்திருப்பதாகவும் குறிப்பிட்டார்


தெல்லிப்பழை

கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக்கழக ஆதரவில் நடைபெற்ற

**அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்**

முதலாம் பரிசு :- இல. 000965 (யாழ்ப்பாணம்)
இரண்டாம்பரிசு:- இல. 003238 (திருநெல்வேலி)
மூன்றாம் பரிசு:- இல. 002943 (கந்தர்மடம்)

10 ஆறுதல் பரிசில்கள்

| | |
|---|---|
| 003790 - புலோலி | 002817 - ஈவினை |
| 000547 - தெல்லிப்பழை | 000086 - சண்டிலிப்பாய் |
| 001346 - கொக்குவில் | 005224 - மகாதனை |
| 000768 - உரும்பராய் | 003871 - சுன்னாகம் |
| 000745 - அம்பனை | 001813 - யாழ்ப்பாணம் |


## "விடுதலைப் புலிகள்" நாளை வெளிவருகிறது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' இதழின் குரல் 37 வது [பங்குனி] ஏடு நாளை வெளிவருகின்றது.

புலிகளின் குரல் பகுதியில், 'புலிகள் இயக்கமும் தமிழீழக் கோரிக்கையும்' என்ற கட்டுரையுடன் வெளிவரும் இவ்விதழில், 'புக்காராவும் எம். ஐ. 8 வும்', தென் தமிழீழத்தில் தமிழின அழிப்பு, 'படையினரின் இன அழிப்புக்கு, குடாநாடும் இலக்காகுமா?' என்ற கட்டுரைகளுடன், மேலும் பல அம்சங்களும் உள்ளடங்கியுள்ளன.

## 'திரிசங்கு சொர்க்கம்'

யாழ். பல்கலைக்கழக இந்து மன்றம் வழங்கும் குழந்தை ம. சண்முகலிங்கத்தின் ''திரிசங்கு சொர்க்கம்'' எனும் நாடகம் இன்று காலை 10.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

புலிகள் ஒப்படைத்த 12 மீனவர்

## பயண ஒழுங்கு முடிந்ததும் இந்தியா அனுப்பப்படுவர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளினால் விடுதலை செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்களினதும் பிரயாணப் பத்திரங்கள் தயார் செய்து முடிந்ததும் கொழும்பில் இருந்து அவர்களின் சொந்த இடங்களிற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர் என கொழும்பில் இந்திய அதிகாரிகள் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர்.

நாகபட்டினத்தின் ஒரு கிராமத்தைச் சேர்ந்த இந்த மீனவர்கள் பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி கடலில் மீன்பிடிக்கச் சென்றதாகவும் மறுநாள் திசை மாறிச் சென்ற சமயம் அப்பகுதிவழியாக பயணம் செய்த விடுதலைப் புலிகள் அவர்களை காப்பாற்றி முல்லைத்தீவிற்கு அழைத்துவந்து அங்குவைத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் மூலம் விடுதலை செய்தனர் என்பது தெரிந்ததே.

## கப்பலில் செல்லும் நோயாளருக்கு அறிவுறுத்தல்

எதிர்வரும் வியாழக்கிழமை அன்று கொழும்பு நோக்கிப் புறப்படவிருக்கும் கப்பலில் கொழும்பு செல்வதற்காகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் நோயாளர்கள் இரண்டு நாட்களுக்கு தேவையான உணவு. மற்றும் தண்ணீருடன் அன்றைய தினம் காலை ஏழு மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் சமுகமளிக்குமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## சிறிலங்கா படையினரால் விவசாயி சுட்டுக்கொலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வந்தாறுமூலை-மாசெப்புக்குடா என்ற பகுதியில் அப்பாவி கிராம விவசாயி ஒருவரை சிறிலங்கா இராணுவத்தினரும் தேசத்துரோகிகளும் இணைந்து சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை காலை மேற்படி கிராமப் பகுதியில் பதுங்கியிருந்து நடாத்திய தாக்குதலிலேயே முகிலன் (வயது 29) என்ற விவசாயி கொல்லப்பட்டுள்ளார்.

## கரடியனாறு பகுதியில் 5 விவசாயிகள் கைது

## கடற் பரப்பிலிருந்து பீரங்கித் தாக்குதல்

(குருநகர்)

நேற்று அதிகாலை 5 மணியளவில் சிறிலங்கா கடற்படைப் பீரங்கிப் படகொன்றுமண்டைதீவுக்குக் கிழக்கே முகத்துவாரக் கட்டைக்கு அப்பால் 'கெழுத்துப்பிட்டி' என்னும் இடத்திற்கு வந்துநின்று கரையோரப் பகுதிகளை நோக்கிப் பீரங்கித் தாக்குதலை நடத்திச் சென்றது

பீரங்கிக் குண்டுகள் கடல்களங்களில் வீழ்ந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீனவர்கள் பீரங்கிப்படகின் வரவைக் கண்டு கரைவந்து சேர்ந்ததால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டது.

சுமார் 15 நிமிடங்கள் கடல் பிரதேசத்தை உள்ளிட்டபகுதிகளை இலக்கு வைத்து தாக்குதல் தொடுத்த சிறிலங்கா கடற்படைப் பீரங்கிப்படகு பின்னர் அப்பகுதியில் இருந்து சென்றதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர். (21)

பருத்தித்துறை துறைமுகத்தில்

## பொருள்களை இறக்கும் தொழிலாளருக்கு பாராட்டு

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்குதுறையில் கப்பலிலிருந்து பொருள்களை இறக்கும் பணிகளுக்குப் பொறுப்பாக இருந்து வரும் மூன்று தொழிலாளர்கள் தலைவர்கள் நேற்றுமுன்தினம் ஹாட்லிக் கல்லூரி அசெம்ளி மண்டபத்தில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இன்றைய காலகட்டத்தில் வசதிகள் குறைந்தநிலையிலும் கப்பல்களில்வருகின்றபொருள்களை உடனுக்குடன் இறக்கி சம்பந்தப்பட்ட இடங்களுக்கு தாமதிக்க வைக்காமல் லொறிகள் மூலம் அனுப்பிவைக்கப்பட்டு வருவதைப் பாராட்டி ஹாட்லிக் கல்லூரி இந்து மாமன்றம் இக்கௌரவிப்பு வைபவத்தை ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு. பாலசிங்கம் தலைமையில் ஏற்பாடு செய்திருந்தது.

திரு. சே. புத்திரசிகாமணி, திரு. க. கனகரட்ணம், திரு. அ. செபமாலை ஆகிய தொழிலாளர்கள் தலைவர்களை இந்து மாமன்றம் பாராட்டிக் கௌரவித்ததோடு, இவர்களுக்கு பரிசில்களையும் வழங்கியது. (யோ)

நோயாளரை

இதுவரை காலமும் மாலை 4.00 மணி தொடக்கம் 5.00 மணிவரை நோயாளரைப் பார்வையிடும்நேரமாகஇருந்து வந்தமை தெரிந்ததே.

தற்போதைய இந்நேரமாற்றம் குறித்து தூர இடங்களில் இருந்து நோயாளர்களைப் பார்வையிட வருபவர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி பருத்தித்துறையில் இருந்து நோயாளர்களை பார்வையிட வந்த சிலர் கருத்துத் தெரிவிக்கையில், தங்களுடைய பகுதிக்கான கடைசி மினிபஸ் மாலை 5.30 மணிக்

## கலை நிகழ்ச்சிகள்

[குருநகர்]

யாழ். திருமறைக்கலாமன்ற சிறுவர் கலைக்கூடம் வழங்கும் கலை நிகழ்ச்சிகள் இன்று மாலை 6.45 மணிக்கு யாழ். பிரதான வீதி மன்றக் கலையரங்கில் ஆரம்பமாகும்.

யாழ். மறைவட்டச் செயலாளர் அருட் திரு. ரி. எச். தவராஜசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

விடுதலைப்

சேவை சந்தேசியக்கு எழுதிய கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் எழுதிய கடிதத்தில் எந்தநேரமும் மரணம் ஏற்படும் என்று எதிர்பார்த்தே யாழ் குடாநாட்டிற்கு பயணத்தை மேற்கொள்ள வேண்டி இருப்பதாகவும் யாழ்ப்பாணம் செல்வது ஆபத்து நிறைந்த கடற்படையின் தீவிர கண்காணிப்புள்ள கடல்நீரேரியைகடந்தே யாழ் குடாநாட்டை சென்றடைய வேண்டி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

யுத்தம்

மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அவசரகால விதிகளின் கீழ் அரசாங்கம் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து இடம்பெற மாட்டாது என ஐ.நா.வின் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் உறுதியளிக்கப்பட்டுள்ளதாகவும் சித்திரவதை, காணமல் போதல் போன்றவை இனி மேல் நடைபெறாது பார்த்துக் கொள்வது என அரசாங்கம் உறுதியுடன் இருப்பதாக சர்வதேச ஆணைக்குழுமுன் உறுதியளிக்கப்பட்டுள்ளதாகவும். தெரிவிக்கப்பட்டது.

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

| தாய் மண்ணில் | | தாயக மடியில் |
|---|---|---|
| 19 — 01 — 1970 |  | 14 — 03 — 1989 |

வீரவேங்கை பிரதாப

| | |
|---|---|
| 003790 - புலோலி | 002817 - ஈவினை |
| 000547 - தெல்லிப்பழை | 000086 - சண்டிலிப்பாய் |
| 001346 - கொக்குவில் | 005224 - மகாதனை |
| 000768 - உரும்பராய் | 003871 - சுன்னாகம் |
| 000745 - அம்பனை | 001813 - யாழ்ப்பாணம் |

அதிர்ஷ்ட சாலிகள் தங்கள் சீட்டுக்களை சமர்ப்பித்து ''சக்தி அகம்'' உடுவில் கிழக்கு, மருதனார்மடம் என்ற முகவரியில் பரிசில்களை பெற்றுக்கொள்ளலாம்.

ஆதரவளித்த நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்

''கிறாஸ் கொப்பேர்ஸ்''
தெல்லிப்பழை.

(சி/6198)

---

சிவமயம்
திருநெல்வேலி
சைவ வித்தியா விருத்திச் சங்கம்

## ஆண்டுப் பொதுக் கூட்டம் 1993

காலம்:- 1993. 03. 21 ஞாயிறு காலை 9.00மணி
இடம்:- பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மண்டபம், கலாசாலைவீதி, திருநெல்வேலி.

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு அனபுடன் அழைக்கின்றோம்.

கலாநிதி அ.நவரத்தினராசா
தலைவர்

திரு. க.சிவனாந்தமூர்த்தி
கௌரவ செயலாளர்

கலாநிதி ந. நடேசன்
பொருளாளர்

(சி-6195)

---

## ஸ்ரீதர் திரையரங்கில்...
## ''தமிழோசை''

தினசரி மாலை
4 மணிக்கும் 6 மணிக்கும்
காண்பிக்கப்படுகிறது.

(சி-6149)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

# கரடியனாறு பகுதியில் 5 விவசாயிகள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் கிராமப்பகுதிகளுக்குள் புகுந்து அப்பாவி விவசாயிகளைக் கைது செய்துள்ளனர். கடந்த புதன்கிழமை அதிகாலை கரடியானாறு இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய சிறீலங்கா இராணுவத்தினர் ரவுண்டலியமடு, வேப்பத்தைவெளி ஆகிய கிராமங்களுக்குள் புகுந்தனர், இக்கிராமத்தில் வயற் காவலில் ஈடுபட்டிருந்த சுமார் 5 விவசாயிகளை கைதுசெய்து தம்முடன் கூட்டிச் சென்றுள்ளனர்.

சித்தாண்டியைச் சேர்ந்த க. சாமித்தம்பி (வயது 52) இவரது மகன் நாதன் (வயது 22) முருகுப்பிள்ளை (வயது 54) இவரது மகன் யோகன் (வயது 20) மாவடிவேம்பைச் சேர்ந்த சண்முகம் (வயது 45) ஆகியோரே இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்களாவர்.

---

### சமஷ்டி

எனினும் சிங்களப் புத்திஜீவிகள் வெளியிட்ட கருத்துக்கள் அரசினால் புரிந்துகொள்ளப்பட்டதாக இல்லை என்றும் கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது

இந்நிலையில் இரத்த ஆறை ஓடச்செய்யும் யுத்தத்தை தொடர்வதா அல்லது அமைதியான முறையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதா என்பதை தீர்மானிக்கும் பொறுப்பு பேரினவாதக் கட்சிகளிடமே இருப்பதாகவும், அதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டுமெனவும், இனப்பிரச்சினையின் அடுத்த கட்டம் இந்த உணர்விலேயே தங்கி இருப்பதாகவும் அப்பத்திரிகைச் செய்தியில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

---

### பம்பாய்

பட்ட அனைத்து இடங்களிலும் இந்தியப் பொலீசார் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

எனினும் எந்த இயக்கமும் இதுவரை இக் குண்டுவெடிப்பு சம்பவங்களுக்கு உரிமைகோரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

---

### பத்து லட்சம்

வியல் காவல்துறை, பரிசோதனைக் கூடம், படைத்துறை சாதனத் தொழிற்சாலையின் வெடிபொருள் நிபுணர்கள் ஆகியோர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

---

# பால பண்டித வகுப்புக்கள்

பாலபண்டித, பிரவேச பண்டித வகுப்புகள் மருதனார் மடக்கல்விக் கோட்டச் சார்பில் நாளை திங்கட்கிழமை பி.ப. 3.00 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது. கல்வி மேம்பாட்டுப் பேரவையின் அனுசரணையுடன் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடத்தவிருக்கும் இவ் வகுப்புக்களின் தொடக்கவிழாவிலே சங்கத் தலைவரும், யாழ். பிரதேசக் கல்விப்பணிப்பாளருமான திரு. இரா சுந்தரலிங்கம், கல்வி மேம்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன், பிரதிக் கல்விப் பணிப்பாளரும், சங்கச் செயலாளருமான திரு. இ. சிவானந்தன், அவ்வக்கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், சங்கச் செயற்குழுவினர், வகுப்பிற் கற்பிக்கவிருக்கும் ஆசிரியர்கள் கலந்துகொள்வார்கள். இவ் வகுப்புக்களிலே கற்பதற்கெனப் பதிவு செய்தோர்களும், புதிதாகச் சேர இருப்பவர்களும் வருகை தருமாறு வேண்டப்படுகின்றனர்.

---

துத் தெரிவிக்கையில், தங்களுடைய பகுதிக்கான கடைசி மினிபஸ் மாலை 5.30 மணிக்குப் புறப்பட்டுவிடுமெனவும், இந்நேர மாற்றத்தினால் தாங்கள் திரும்பிச்செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், நோயாளர்களைப் பார்வையிடும் பகுதியில் வரிசையில் நின்று தாங்கள் கொண்டு வரும் பொருள்களை வைத்தியசாலை பாதுகாப்பு ஊழியர்களிடம் காட்டி உள்ளே செல்லவே 5.30 மணியாகிவிடுகின்றது எனவும், தெரிவித்தனர்.

குறிப்பிட்ட நேர மாற்ற அறிவித்தல் பலகை நேற்று வெளிநோயாளர் பகுதியில் தொங்கவிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (சி)

---

### குண்டு

நரசிம்மராவ் ஆகியோர் அதிர்ச்சியும் வேதனையும் தெரிவித்தனர்.

இதேவேளை பம்பாய் நிலைவரத்தை கவனிப்பதற்ககா மத்திய உள்துறை அமைச்சரகத்தின் தனிப்பிரிவு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கின்றது.

நேற்றுமுன்தினம் பம்பாயில் நிகழ்ந்த குண்டுவெடிப்பு சம்பவம்குறித்து அதிர்ச்சியும் துக்கமும் தெரிவித்த பிரதமர்நரசிம்மராவ் இந்த விமசத்தனமான மனிதாபிமானமற்ற குற்ற செயலை நாடு முழுவதுமே கண்டிக்கின்றது என்று கூறினார். குற்றம் இழைத்தவர்களை தேடி கண்டுபிடிக்க நாடு எல்லாவகையிலும் முயற்சி செய்யுமெனவும் வதந்திகளை நம்பாமல் அமைதியுடன் இருக்குமாறு அவர் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

---

### பம்பாயில்

கும் பி. பி. ஸி, முகவர் இலங்கைத் தமிழ்க் குழுக்களைச் சேர்ந்த எவராவது இதனைச் செய்திருப்பராயின் அவர் விடுதலைப் புலிகளாகத்தான் இருக்க முடியும் எனவும் ஏனெனில் அதற்கான ஆற்றலும் வலிமையும் அவர்களுக்குத்தான் இருப்பதாக கருதுவதாகவும் குறிப்பிட்டார்.

---



வீரவேங்கை பிரதாப
[தங்கராசா பிரேமதாஸ்]

வித்தாக விழுந்து விட்ட
வீரனே! உன்நினைவில்,
இத்தனை நாள் நனைந்தோம்!
இன்றோடு ஆண்டு நான்கா
இத்தரையில் உன்பாதம் பட்டு
காலடிச் சுவடுகளின் பாதையில் நாமும்

பிரிவால் துயருறும்,
தங்கராசா குடும்பத்தினர்

பிரதாப் வீதி,
கோண்டாவில் வடக்கு.

[சி-6199]

---

# மரண அறிவித்தல்
## திருமதி சின்னையா சுந்தரம்

மண்டைதீவு1-ம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் தற்பொழுது விசுவமடுவில் வசித்தவருமாகிய திருமதி சின்னையா சுந்தரம் காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற குழந்தைவேல் - தெய்வானை ஆகியோரின் அன்பு மகளும், தங்கச்சியம்மாவின் அன்புத் தாயாரும், துரைசிங்கத்தின் மாமியாரும், அன்பரசி, எழிலரசி ஆகியோரின் அருமைப் பேர்த்தியாரும், காலஞ்சென்ற கு. கணபதிப்பிள்ளை, கனகசபை, தில்லைவனம், அன்னலட்சுமி, கனகரெத்தினம் ஆகியோரின் சகோதரியுமாவார் அன்னாரின் ஈமக்கிரியை 11-3-1993 வியாழக்கிழமை மாலை 2.00 மணியளவில் விசுவமடு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
சி. துரைசிங்கம்

(4468)

---

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 13-03-1993

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்: 8587

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்: இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-2414, 27-0849, 41-4176, 42-3945, 27-4023, 26-3937, 24-8710, 26-0535, 28-3528, 42-1722, 26-0649, 42-1046, 42-2157, 41-1996, 42-2323, 42-7975, 42-9220, 43-2524, 22-8075, 24-6448.